TNTP010018032026

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்**
**திருச்சிராப்பள்ளி**

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 21ம் நாள் செவ்வாய்கிழமை
**அமர்வு வழக்கு எண்.137/2026**
**CNR.No. TNTP01-001803-2026**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>முசிறி காவல் நிலையம்,<br>குற்ற எண்.143/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், முகவரி | | செல்வகுமார் த/பெ கருப்பண்ணன், வயது 49/2025,<br>வடக்கு தெரு, சிட்டிலரை,<br>முசிறி தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| சம்பவ நாள் | | 18.04.2025 |
| புகார் நாள் | | 18.04.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 18.04.2025 |
| எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | எதிரிக்கு எதிராக 275, 123 BNS act r/w 6, 24(1) of COTPA act ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் பதிலுரை | & | குற்றவாளி இல்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | & | இந்த வழக்கில் சட்டப்பிரிவு 123 BNS ன் கீழ் நிரூபிக்க எந்தவித நிலையான சாட்சியங்கள் எதுவும் இல்லை. ஆனால் இந்த வழக்கில் புகையிலை பொருட்களை கைப்பற்றிய சங்கதி |

| | | |
|---|---|---|
| | | நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக அரசு தரப்பு 6 உ/இ 24(1) COTPA Act ன் கீழ் குற்றத்தை நிரூபித்து விட்டது என முடிவு செய்து எதிரிகளை 258(2) BNSS ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு மேற்படி பிரிவின் கீழ் ரூ.200/- அபராதம் விதிக்கப்படுகிறது. எதிரி அபராதம் கட்ட தவறும் பட்சத்தில் பிரிவு 8 BNSS ன் கீழ் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து உத்தரவிடுகிறன். |
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | இவ்வழக்கு இறுதியாக முடிவுற்றுள்ளதாலும், பொருள் சாட்சியாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் -10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா - 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) பாக்கெட்டுகள் சட்டப்பூர்வமான எந்தவித பயன்பாட்டிற்கும் உகந்ததாக இல்லாததுடன், அவற்றை மீள ஒப்படைப்பதற்கோ அல்லது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக விநியோகிப்பதற்கோ தகுதியற்றவையாக இருக்கலாம்.<br>எனவே, பறிமுதல் செய்யப்பட்ட மேற்கண்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் -10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா - 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) பாக்கெட்டுகளை அரசுக்கு பறிமுதல் செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு, அவற்றின் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ள பிரிவு 38(4) Food Safety and Standard Act, 2006 அலுவலரால் சட்டத்தின்படி அழிக்கப்பட வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.<br>மேலும், அவ்வாறு அழிக்கும் நடவடிக்கை பொறுப்புள்ள அலுவலர்/குழுவின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அழிக்கப்பட்ட பொருட்களின் விவரம், அளவு, அழிக்கப்பட்ட தேதி |

| | | |
|---|---|---|
| | | மற்றும் இடம், மேலும் நிகழ்வில் கலந்து கொண்ட அலுவலர்கள் மற்றும் சாட்சிகளின் பெயர்கள் மற்றும் கையொப்பங்களுடன் முறையான அழிப்பு மகஜர்/பஞ்சநாமா தயாரிக்கப்பட வேண்டும்.<br><br>அழிப்பு நடவடிக்கை முடிவடைந்த பின்னர், அதற்கான அழிப்பு அறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய மகஜர்/பஞ்சநாமா ஆகியவை இவ்வழக்கின் கோப்பில் பதிவு செய்யும் பொருட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.<br><br>இவ்வுத்தரவின் சான்று நகலை உரிய அலுவலருக்கு அனுப்பி, அதன்படி நடவடிக்கை மேற்கொண்டு இணக்க அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 21.07.2026 தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி.S.எழிலரசி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.துரைசெல்வம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் முசிறி நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.02/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.

**<u>1. இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –</u>**

அரசு தரப்பு வழக்கானது, முசிறி காவல் சரகம், சிட்டிலரை செல்வகுமார் என்பவரது டீ கடையில் கடந்த 18.04.2025–ம் தேதி மதியம் 14.00 மணிக்கு எதிரி செல்வகுமார் என்பவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை சார்ந்த பொருட்களான போதை பொருட்கள் மனிதனின் மதிமயக்கம் செய்தும், உடலுக்கு ஊருவிளைவிக்கும் என்றும், இதனால் பொது மக்களின் எதிர்காலம் பாதிக்க கூடும் என்று தெரிந்தே ஹான்ஸ் – 20 கிராம் X 10 பாக்கெட் – 200 கிராம் மற்றும் விமல் பான்மசாலா 2.5 கிராம் X 20 பாக்கெட் – 50 கிராம் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி ஆகிய உம்மீது சட்டப்பிரிவு 123 BNS r/w 6, 24(1) of COTPA Act–ன் கீழும், மேற்கண்ட சம்பவத்தின் பொழுது பொது சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்க கூடிய உணவு பொருட்களான Hans மற்றும் பான்மசாலாவை விற்பனை செய்த குற்றத்திற்காக எதிரியாகிய உம்மீது சட்டப்பிரிவு 275 BNS Act–ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.02/2026 ஆக குற்றவியல் நீதித்துறை நடுவர் முசிறி நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும் கு.வி.மு.ச.207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது எதிரி மீது சட்டப்பிரிவு 275, 123 BNS act r/w 6, 24(1) of COTPA act–ன் கீழான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.137/2026 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் கு.வி.மு.ச பிரிவு 226ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் BNSS பிரிவு 250 உ/இ பிரிவு 251ன் படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 275, 123 BNS act r/w 6, 24(1) of COTPA act ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

4. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரியிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி **அ.சா.1** முதல் **அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.த.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் எதையும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:</u>**

6.1) அ.சா.1 பிரதீப், முதல் நிலை காவலர் தனது சாட்சியத்தில் நான் தற்போது பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2025-ம் தேதி நான், காவலர் செந்தில்குமார், உதவி ஆய்வாளருடன் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை சார்ந்த பொருட்கள் சம்பந்தமாக ரோந்து பணிக்கு சிட்லரை கிராமத்திற்கு சென்ற பொழுது செல்வகுமார் டீ கடையில் சோதனை செய்தோம்.

அந்த கடையில் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய ஹான்ஸ் பாக்கெட்டுகள் -10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா - 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) ஆகியவற்றை மதியம் 02.30 மணியளவில் உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் செந்திலும்

சாட்சி கையெழுத்து செய்தோம். என்னை ஆய்வாளர் விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 செந்தில்குமார், தலைமை காவலர் தனது சாட்சியத்தில் நான் தற்போது நெடுஞ்சாலை ரோந்து வாகனம் எண்.9–ல் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2025–ம் தேதி நான், காவலர் பிரதீப், உதவி ஆய்வாளருடன் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை சார்ந்த பொருட்கள் சம்பந்தமாக ரோந்து பணிக்கு சிட்லரை கிராமத்திற்கு சென்ற பொழுது செல்வகுமார் டீ கடையில் சோதனை செய்தோம்.

அந்த கடையில் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய ஹான்ஸ் பாக்கெட்டுகள் –10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா – 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) ஆகியவற்றை மதியம் 02.30 மணியளவில் உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் பிரதீப்பும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னை ஆய்வாளர் விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 கோவிந்தராஜ் மற்றும் அ.சா.4 சுப்பிரமணி தங்களது சாட்சியத்தில் நான் முசிறி தாலுகா, சிட்லரை கிராமத்தில் குடியிருக்கிறேன். கடந்த 18.04.2025–ம் தேதி போலீசார் என்னை அழைத்தார்கள். கையெழுத்து செய்தேன். வேறு ஒன்றும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளனர்.

6.4) அ.சா.5 ஆசைதம்பி காவலர் தனது சாட்சியத்தில் நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 18.04.2025–ம் தேதி அன்று முசிறி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது நானும், காவலர்களும் ரோந்து பணிக்கு சென்ற பொழுது எதிரி செல்வகுமார் என்பவரது கடையை பரிசோதனை செய்து ஆய்வு மேற்கொண்ட பொழுது அந்த கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் மற்றும் விமல் பான்மசாலா மொத்தம் 30 பாக்கெட்டுகள் கைப்பற்றி நிலையம் வந்து நிலைய

குற்ற எண்.143/2025, சட்டப்பிரிவுகள் 275, 123 BNS Act r/w 6, 24(1) of COTPA Act–ன் கீழ் வழக்கினை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.1** ஆகும்.

கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.2**. சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3**. மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4**. கைப்பற்றப்பட்ட தடயங்களை நகராட்சி ஆணையர் முசிறி அவர்களுக்கு அழிக்க கடிதம் அனுப்பி வைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.5) அ.சா.6 செல்லதுரை காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்பொழுது முசிறி காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் நான் கோப்பினை மேல் விசாரணைக்காக எடுத்து கொண்டு சாட்சிகளை விசாரித்ததில் சார்பு ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலங்கள் சரியாக இருந்ததால் நான் அவர் விசாரித்த சாட்சிகளிடம் தனியாக வாக்குமூலம் பெறவில்லை. தடய ஆய்வு அறிக்கை **அ.த.சா.ஆ.5** ஆகும். பின்பு சாட்சிகளை விசாரித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார்கள். எதிரி தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**<u>தீர்வு:-</u>**

இந்த வழக்கில் அரசு தரப்பு மொத்தம் 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.6 இந்த வழக்கில் 18.04.2025 எதிரியை சோதனை செய்து ஹான்ஸ் பாக்கெட்டுகள் -10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா - 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) பாக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இந்த வழக்கில் முக்கியமான தீர்மானிக்கப்பட வேண்டியது கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்கள் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடியதா இல்லையா என்பதே ஆகும். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் தடய ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு 6235/FSSA/A4/2025 அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதில் கைப்பற்றப்பட்ட பொருட்களில் Nicotine இருந்ததாகவும், மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் உடல் நலத்திற்கு தீங்கு ஏற்படுத்தக் கூடியவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவைகள் அரசால் தடை செய்யப்பட்டவை என்பது உண்மை.

அரசால் தடை செய்யப்பட்டவை என்றாலும் அதை உபயோகிக்க கூடாது என்று எந்த சாட்சியமும் சான்றாவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றப்பட்ட பொருட்களால் யாரும் பாதிக்கப்பட்டார்களா என்பது பற்றி எந்த சாட்சியமும் முன்னிலைப்படுத்தவில்லை. கைப்பற்றப்பட்ட பொருட்களை ஆராயும் பொழுது அந்த பொருட்கள் முறையாக அனுமதி பெறப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த பொருட்களை தயாரித்த நிறுவனங்கள் பற்றி எந்த புலன் விசாரணையும் செய்யப்படவில்லை.

**<u>முடிவாக,</u>** இந்த வழக்கில் சட்டப்பிரிவு 123 BNS ன் கீழ் நிரூபிக்க எந்தவித நிலையான சாட்சியங்கள் எதுவும் இல்லை. ஆனால் இந்த வழக்கில் புகையிலை பொருட்களை கைப்பற்றிய சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக அரசு தரப்பு 6 உ/இ 24(1) COTPA Act ன் கீழ் குற்றத்தை நிரூபித்து விட்டது என முடிவு செய்து எதிரிகளை 258(2) BNSS ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு மேற்படி பிரிவின் கீழ் ரூ.200/- அபராதம்

விதிக்கப்படுகிறது. எதிரி அபராதம் கட்ட தவறும் பட்சத்தில் பிரிவு 8 BNSS ன் கீழ் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து உத்தரவிடுகிறன்.

இவ்வழக்கு இறுதியாக முடிவுற்றுள்ளதாலும், பொருள் சாட்சியாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் –10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா – 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) பாக்கெட்டுகள் சட்டப்பூர்வமான எந்தவித பயன்பாட்டிற்கும் உகந்ததாக இல்லாததுடன், அவற்றை மீள ஒப்படைப்பதற்கோ அல்லது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக விநியோகிப்பதற்கோ தகுதியற்றவையாக இருக்கலாம்.

எனவே, பறிமுதல் செய்யப்பட்ட மேற்கண்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் –10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா – 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) பாக்கெட்டுகளை அரசுக்கு பறிமுதல் செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு, அவற்றின் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ள பிரிவு 38(4) Food Safety and Standard Act, 2006 அலுவலரால் சட்டத்தின்படி அழிக்கப்பட வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேலும், அவ்வாறு அழிக்கும் நடவடிக்கை பொறுப்புள்ள அலுவலர்/குழுவின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அழிக்கப்பட்ட பொருட்களின் விவரம், அளவு, அழிக்கப்பட்ட தேதி மற்றும் இடம், மேலும் நிகழ்வில் கலந்து கொண்ட அலுவலர்கள் மற்றும் சாட்சிகளின் பெயர்கள் மற்றும் கையொப்பங்களுடன் முறையான அழிப்பு மகஜர்/பஞ்சநாமா தயாரிக்கப்பட வேண்டும்.

அழிப்பு நடவடிக்கை முடிவடைந்த பின்னர், அதற்கான அழிப்பு அறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய மகஜர்/பஞ்சநாமா ஆகியவை இவ்வழக்கின் கோப்பில் பதிவு செய்யும் பொருட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இவ்வுத்தரவின் சான்று நகலை உரிய அலுவலருக்கு அனுப்பி, அதன்படி நடவடிக்கை மேற்கொண்டு இணக்க அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2026–ம் வருடம் ஜூலை மாதம் 21**–ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 21.07.2026

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | பிரதீப், தலைமை காவலர் |
| அ.சா.2 | செந்தில்குமார், தலைமை காவலர் |
| அ.சா.3 | கோவிந்தராஜ் |
| அ.சா.4 | சுப்பிரமணி |
| அ.சா.5 | ஆசைதம்பி, காவலர் |
| அ.சா.6 | செல்லதுரை, காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.2 | – | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | – | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.4 | – | வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | – | தடய ஆய்வு அறிக்கை நகல் |

<u>**சான்று பொருட்கள்**</u> **:–**

ஹான்ஸ் பாக்கெட்டுகள் –10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா – 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) பாக்கெட்டுகள்

<u>**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–**</u> இல்லை.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 21.07.2026